மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (15.09.2025) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், பொது சுகாதாரத்துறையில் ஆய்வக நுட்புநர் பணியிடத்திற்கும், உணவு பகுப்பாய்வு கூடங்களில் முதுநிலை பகுப்பாய்வாளர் பணியிடத்திற்கும், ஆய்வக தொழில்நுட்புநர் பணியிடத்திற்கும் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணையினை வழங்கினார். இந்நிகழ்வில் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து கட்டுப்பாட்டுத்துறை ஆணையர் லால்வேனா, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், கூடுதல் இயக்குநர் மரு.தேவபார்த்தசாரதி, துணை இயக்குநர் மரு.சித்ரசேனா மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

திருக்கோவிலூர் – கீழத்தாழனூர் கிராமத்தில்

மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 16 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், கீழத்தாழனூர் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், அரும்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கலியபெருமாள் த/பெ. குப்பன் என்பவர் நேற்று (14.9.2025) பிற்பகல் சுமார் 02.00 மணியளவில் கீழத்தாழனூர் கிராமத்தில் இரும்புக்குழாயினை எடுக்க முயன்றபோது எதிர்பாராதவிதமாக உயர்மின் அழுத்த மின்சாரம் தாக்கியதில் மேற்படி நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த திரு. கலியபெருமாள் அவர்களின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இராணிப்பேட்டை மாவட்டத்தில்

‘ஓரணியில் தமிழ்நாடு ’ திட்டத்தில் 5 லட்சம் உறுப்பினர்கள் இணைப்பு!

அமைச்சர் ஆர்.காந்தி செய்தியாளர்களிடம் தகவல்!

இராணிப்பேட்டை, செப்.16

இராணிப்பேட்டை மாவட்டத்தில் ’ ஓரணியில் தமிழ்நாடு’ திட்டத்தில் சுமார் 5 லட்சம் உறுப்பினர்கள் இணைந்துள்ளதாக கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆர். காந்தி செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

ஓரணியில் தமிழ்நாடு என்ற பெயரில்,வாக்குச்சாவடிதோறும் 30 சதவீதம் வாக்காளர்களை தி.மு.க. உறுப்பினர்களாக்கும் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் மதுரையில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத் தில் அறிவித்தார்.

அதைதொடர்ந்து இந்த உறுப்பினர் சேர்க்கை திட்டத்தை கடந்த ஜூலை 1 ஆம் தேதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னையில் தொடங்கி வைத்தார். இதற்காக தி.மு.க. தகவல் தொழில்நுட்ப

அணி சார்பில், தொகுதிக்கு ஒருவர் என 234 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, உறுப்பினர் பதிவுக்கென தனி செயலியும் உருவாக்கப்பட்டு தமிழகம் முழுவதும் உறுப்பினர் சேர்க்கை திட்டம் தொடங்கப்பட்டது.

அதன் படி கடந்த 70 நாட்களில் தமிழகத்தில் 68 ஆயிரம் வாக்குச் சாவடிகளில் சுமார் 1 கோடிக்கும் அதிகமான குடும்பங்கள் இணைந் துள்ளனர்.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு திட்டத் தில் 1லட்சத்து 81 ஆயிரத்து 716, குடும்பங்களில், 5 லடசத்து 33 ஆயிரத்து 478 பேர் இணைந்துள்ளனர். இந்த திட்டத்தில் யாரையும் நாங்கள் கட்டாயப்படுத்தி இணைக்கவில்லை, தாமாக முன் வந்து இணைந்துள்ளனர்.

இந்த நிலையில் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் தேதி தமிழகம் முழுவதும் உள்ள வாக்குச்சாவடிகளில் 5 உறுதி மொழிகளை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். அதன் படி 68 ஆயிரம் வாக்குச் சாவடிகளிலும், இராணிப்பேட்டை மாவட்டத்தில் 1,122 வாக்குச் சாவடிகளில் உறுதி மொழி எடுத்து ஒன்றிய அரசின் பாராபட்ச நடவடிக்கைகளை மக்களுக்கு எடுத்துச் செல்வதே இதன் நோக்கம் ஆகும் என்றார்.தொடர்ந்து 20 மற்றும் 22 ஆகிய தேதிகளில் பொதுக் கூட்டங்கள் நடைபெற உள்ளது.

ஆளும் அரசை பற்றி குறை கூறுவது எளிது, விஜய் போன்றோர் வாக்குறுதிகளை நிறைவேற்ற வில்லை என குறை கூறுகின்றனர்.

ஆனால் தமிழக முதல்வர் சொல்லாத திட்டங்களான மகளிர் உரிமைத் திட்டம், மகளிருக்கு இலவச பேருந்து திட்டம், மக்களுடன் முதல்வர், காலை உணவுத் திட்டம், நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம், தமிழ்ப்புதல்வன் உள்ளிட்ட முதல்வர் அறிவித்த பல்வேறு திட்டங்களை அண்டை மாநிலங்களில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன என்றார்.

மலேசியாவில் – மலேசியா தளபதி பேரவை சார்பில்

அண்ணா பிறந்த நாள் விழா!

கோலாலம்பூர், செப்.16-

பேரறிஞர் அண்ணா அவர்களின் 117-வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு. மலேசியா தளபதி பேரவை சார்பில் தொழிலதிபர் என்.ஏ.பி.சலீம் முகமது இக்பால் தலைமையிலும், ஹச்.எம். ஜெய்னுதீன். ஜே. சிவானந்தம், ஏ.ஆர். ரகுமான்கான், அல் அன்சர் ரெஸ்டாரன்ட், மூர்த்தி, சதீஷ்குமார், பூபாலன், சையது ஆகியோர் முன்னிலையிலும் அமல் ராஜ் அண்ணா அவர்களின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வில் மலேசிய தளபதி பேரவையின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் கழக உடன் பிறப்புகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதியில் பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ படத்துக்கு மாலை அணிவித்துமரியாதை செலுத்தி தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டோம் என்று உறுதிமொழியை நூற்றுக்கணக்கான கழகத் தொண்டர்களுடன் ஏற்றார்.

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டம், பாகம் 17 நாவலர் குடியிருப்பு பகுதியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழாவும் முப்பெரும் விழா முன்னிட்டு தமிழ் நாட்டை தலைகுனிய விட மாட்டோம் எனும் உறுதிமொழியை ஏற்றனர். நிகழ்ச்சியில் வட்ட கழக செயலாளரும் 4வது மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, தலைமையில் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, தொகுதி பொறுப்பாளர் கே.வி.லோகேஷ், பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், மாஸ் டி.வெங்கடேசன், ஏ.டி.மணி, என்.லோகநாதன், கோவிந்தராஜ், ஏ.முருகேசன், எஸ்.ராஜா, எஸ்.கிருஷ்ணன், எல்.சரவணன், கே.கமருதீன், எம்.சரஸ்வதி, ஷாலினி, மானாமதுரை, ஜலால், எம்.ஹரிகிருஷ்ணன், கே.ஜானகிராமன், ஹரிஹரன், எல்.சந்திரசேகர், எம்.விநாயகம் மற்றும் கழக தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் - பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர்- அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், ஆலோசனைக் கூட்டம் இன்று (16.09.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 5.00 மணியளவில், சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி. மஹாலில் மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்நாள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதிப் பார்வையாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி காணொலியில் வாழ்த்துரை!

தி.மு.க. அயலக அணி சார்பில் அமெரிக்காவில் முப்பெரும் விழா!

எம்.எம்.அப்துல்லா – கவிஞர் சல்மா எம்.பி. – எழுத்தாளர் இமையம் –அ.முகமது ஜியாவுதின் பங்கேற்பு!

டல்லாஸ், செப். 16 –

அமெரிக்காவின் டல்லாஸ் நகரில், தி.மு.க.வின் வெளிநாட்டுப் பிரிவான அமெரிக்க அயலக தி.மு.க. தெற்கு மண்டலம் சார்பில் முப்பெரும் விழா சிறப்பாக நடைபெற்றது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, ஆகியோரின் பிறந்த நாட்களை கொண்டாடும் விதமா கவும், திராவிட முன்னேற்றக் கழகம் நிறுவப்பட்ட நாளை கொண்டாடும் விதமாகவும் மற்றும் அமெரிக்க அயலக தி.மு.க.வின் ஓராண்டு நிறைவைக் குறிக்கும் வகையிலும் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

முப்பெரும் விழா தொடங்குவதற்கு முன்னதாக, பெரியாரின் 147 வது பிறந்தநாளை முன்னிட்டு பிளானோ (Plano) நகரில் உள்ள ஆர்பர் ஹில்ஸ் நேச்சர் பிரசர்வ் (Arbor Hills Nature Preserve) பகுதியில் பெரியார் ஓட்டம்/நடை (Periyar Run/Walk) நடைபெற்றது. இதில் ஏராளமானோர் உற்சாகத்துடன் பங்கேற்று, பெரியாரின் கொள்கைகளை நினைவு கூர்ந்தனர். பங்கேற்ற அனைவருக்கும் சிறப்பு டிஷர்ட்டுகளும், பதக்கங்களும் வழங்கப்பட்டன.

ஓட்டப்பந்தயத்திற்குப் பிறகு, முப்பெரும்விழாநிகழ்ச்சிபிளானோ (Plano) நகரிலுள்ள பார் லைப்ரரி (Parr Library)யில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தி.மு.க.வின் அயலக அணி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் நேரில் கலந்துகொண்டனர்.

விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, தலைமை கழகச் செய்தி தொடர்புக் குழு இணைச் செயலாளர் மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் சல்மா, எழுத்தாளர் இமையம் மற்றும் முன்னாள் மாவட்ட அமர்வு நீதிபதி அ.முகமது ஜியாவூதீன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர்.

தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி காணொலி வாயிலாக உரையாற்றி வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

விழாவில் பேசிய சிறப்பு விருந்தினர்கள், திராவிட இயக்கத்தின் கொள்கைகளான மொழிப்பற்று, சுயமரியாதை, பகுத்தறிவு மற்றும் சமூக நீதி ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும், தமிழினத் தலைவர் முன்னாள் முதல்வர் கலைஞர் அரசின் சாதனைகளையும் மற்றும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் எடுத்துரைத்தனர். அயலக தமிழர்களின் இன்ப துன்பங்களில் திமுக அயலக அணி பாதுகாப்பு அரணாக செயல்பட்டு வருவதாக புகழாரம் சூட்டினர்.

நிகழ்வுக்கான ஏற்பாடுகளை அமெரிக்க அயலக தி.மு.க. தெற்கு மண்டலத்தின் அமைப்பாளர் டெக்சாஸ் பாண்டிமதி மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆனந்த் பழனிசாமி, ராம்குமார், சரவணகுமார் ஆகியோர் மிகச் சிறப்பாக செய்திருந்தனர். இவர்களைப் போன்ற புலம்பெயர்ந்த தமிழர்கள், தமிழகத்தின் பெருமைகளையும், தி.மு.க.வின் கொள்கைகளையும் உலகம் முழுவதும் பரப்பும் பணியில் ஈடுபட்டிருப்பது பாராட்டத்தக்கது.

தி.மு.க. விவசாய அணி

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. விவசாய அணியின் திருப்பூர் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

திருப்பூர் வடக்கு மாவட்டம்

தலைவர் - **பி. ஈஸ்வரன்,** 15/72, செம்மே கவுண்டன்பாளையம், சடையபாளையம் அஞ்சல், குண்டடம் - 638702, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - கா. செல்லமுத்து ஆபீஸ் தோட்டம், குப்புச்சிபாளையம், தாராபுரம் - 638657, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - ஆர்.ஜி. முத்துக்குமார் 3, மாரியம்மன் கோவில் வீதி, ருத்ராவதி, குண்டடம் - 638702, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. ஈஸ்வரன் 5/89, மொசுகுத்திவலசு, மறவபாளையம் அஞ்சல், சென்னிமலை வழி - 638051, காங்கேயம், திருப்பூர் மாவட்டம். 2) என். சாமிநாதன் 6-35, புதுவலசு, சாணார்பாளையம், சென்னிமலை - 638051, திருப்பூர் மாவட்டம். 3) எல்.பி. பழனிச்சாமி 143, சேரன்குட்டை தோட்டம், இலக்கும நாயக்கன்பட்டி அஞ்சல், வெள்ளகோவில் - 638111, திருப்பூர் மாவட்டம். 4) டி. நாகராஜ் 6/14, பழையாண்டிபாளையம் புதூர், வீரணம்பாளையம் அஞ்சல், காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம். 5) எம். செல்வரங்கமுருகன் அரிக்காரன்வலசு அஞ்சல், அரவக்குறிச்சி வழி - 639201, தாராபுரம் வட்டம், திருப்பூர் மாவட்டம். 6) மில்கா ஆர்.எம். கந்தசாமி மில்கா ஆயில் மில், இராமபட்டிணம், சிவன்மலை அஞ்சல், காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம். 7) கே. சுப்பிரமணியம் பாலா கார்டன் சேரன் நகர், வெள்ளக்கோவில் - 638111, திருப்பூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 13-09-2025.

ஏ.கே.எஸ்.விஜயன்
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி

தி.மு.க. வர்த்தகர் அணி

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. வர்த்தகர் அணியின் ஈரோடு வடக்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

ஈரோடு வடக்கு மாவட்டம

தலைவர் - **வி.ஆர்.வெங்கிடுசாமி,** மாங்கல்கரடு, நஞ்சை கோபி, பா.வெள்ளாளபாளையம், கோபிசெட்டிபாளையம் ஈரோடு மாவட்டம்.

துணைத் தலைவர் - எஸ்.செந்தில்குமரன், 21/11, பாரதி வீதி, புளியம்பட்டி, சத்தி.

அமைப்பாளர் - கே.பி.எஸ்.மகாலிங்கம், 94, கந்தாம்பாளையம், பச்சாம்பாளையம் (அ), அந்தியூர்.

துணை அமைப்பாளர்கள் - 1) மா.சுப்பிரமணியம், 130/ஏ, கெட்டிசமுத்திரம், நம்பியூர். 2) ஏ.ராஜேந்திரன், சீதாலட்சுமிபுரம், கோபி. 3) சு.ஈஸ்வரமூர்த்தி, 4/153, மேட்டுக்கடை, சாவக்கட்டுப்பாளையம், நம்பியூர். 4) கே.குமார், 16/22, நல்லதம்பி வீதி, புதுவள்ளியம்பாளையம், கோபி. 5) ஏ.ஈஸ்வரமூர்த்தி, சத்தி-அத்தாணி மெயின் ரோடு, பங்களாப்புதூர், கோபி. 6) எம்.முத்துசாமி, ஆலாங்காட்டூர், பொலவக்காளிபாளையம், கோபி. 7) ஜி.வி.செங்குட்டுவன், 37, குமணன் வீதி, கோபி.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 13-09-2025.

காசி முத்துமாணிக்கம்
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி

புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் – மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில்

பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா! 300 தாய்மார்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

கே.கருணாகரன் முன்னிலையில்! சி.பாலாஜி, சி.மூர்த்தி, எம்.என்.அஜய் தென்னவன் பங்கேற்பு!

மாதவரம், செப்.16-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 117 வது பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்றது. 17வது வட்டம் வடபெரும்பாக்கம் சென்னை மாநகராட்சி அலுவலகம் அருகே நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் நிகழ்ச்சியில் 300க்கும் மேற்பட்ட கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

17வது வட்டம் வடபெரும்பாக்கம் கிளைக் கழக அலுவலகம் எதிரே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அண்ணாவின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து நிர்வாகிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினார்கள் அண்ணாவின் புகழ் ஓங்குக கலைஞரின் புகழ் ஓங்குக என்று கோஷமு ழக்கங்களிடர். தொடர்ந்து திராவிட மாடல் அரசின் சாதனைகளான இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், நம்மை காக்கும் 48, குழந்தைகளுக்கான காலை உணவு திட்டம், ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகை, இலவச பேருந்து பயணம் போன்ற திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் பொதுமக்களிடம் சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தாய்மார்கள் அனைவருக்கும் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் சேலைகளை வழங்கினார்.

17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையிலும், வட்டக் கழக நிர்வாகிகள் துணை செயலாளர் சி. பாலாஜி. சி. மூர்த்தி, வி பார்த்தசாரதி பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம் என் அஜய் தென்னவன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் கே. சண்முகபிரியன், எஸ். சிவகுமார், டி. வினோத், ராஜ்குமார்,, ஆதிதிராவிடர் நல பகுதி அமைப்பாளர் நாகராஜ், பாக முகவர்கள் டி.திவாகர், வி. சுமிர், ஜி.கார்த்திக், எம். மைக்கேல்,பி. செந்தில், இ. கார்த்திக், ஜே. அன்பரசன், வி விஷ்ணு,ராகேஷ், சஞ்சய், விநாயகபுரம் கமலநாதன், ஏ. பாலகிருஷ்ணன், திருநிலை எஸ் எம் சதீஷ்குமார், பிரசாந்த், அரவிந்தன், கௌதமன், ரஞ்சன், சதீஷ்குமார், தீயம்பாக்கம் எம். ஜான்சன், ஜி. பூபாலன், சுதர்சன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

இறுதியாக பாக முகவர் எம். மைக்கேல் நன்றி கூறினார்.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 17வது வட்டம் வடபெரும்பாக்கம் பகுதியில் 300 தாய்மார்களுக்கு சேலைகள் வழங்கப்பட்டன. வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில், சி. மூர்த்தி, சி.பாலாஜி, வி.பார்த்தசாரதி, எம். என். அஜய் தென்னவன், எஸ். சிவக்குமார், கே. சண்முகப்ரியன், டி. திவாகர், ஜி.கார்த்திக், வி. சுமிர்,எம் .மைக்கேல், இ. கார்த்திக், பி. செந்தில், கமலநாதன்,எம்.என். தளபதி, திருநிலை எஸ். எம். சதீஷ்குமார், ஜெ அன்பரசன் சின்ன தோப்பு சதீஷ்குமார், ஏ. பி. கிட்டு தீயம்பாக்கம் ஜான்சன், பூபாலன், சுதர்சன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

காஞ்சிபுரம் மாநகராட்சியில் மாமன்ற உறுப்பினர். திருமதி. மல்லிகா ராமகிருஷ்ணன் 18. ஆவது வட்டத்தில் தாயுமானவர் திட்டத்தை துவக்கி வைத்தார். மாநில வர்த்தக அணி துணை செயலாளர்.வி எஸ்.ராமகிருஷ்ணன் வட்ட செயலாளர் மண்டி சம்பத்.வட்ட பிரதிநிதிகள். பார்த்திபன். ரத்தினம் மகளிர் அணி. விஜயா புருஷோத்தமன்.கீதா மயில்வாகனன் இளைஞர் அணி மனோஜ் குமார். சரவணன். உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்